DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-------
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, (FTC) ERANIEL.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | C.C.No. 232/2019 |
| Preliminary Register | } | |
| Sessions | } | STC.No. |

Deposition of witness for { Prosecution { Defence { Court  PW. 1

Name : **திரு. டைட்டஸ்**

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.11.2022

முதல் விசாரணை

நான் தற்போது மண்டைக்காடு காவல் நிலையத்தில் சிறப்பு உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். 27.06.2013 ம் தேதி 19.30 மணிக்கு நான் குளச்சல் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வந்தேன்.

2. அப்போது குளச்சல் காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் நானும், சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.சந்திரபாபு, தலைமை காவலர் திரு. பெலிக்ஸ் ஆகியோர்களாக ரோந்து செய்த வந்தபோது குளச்சல் பீச் ரோடு அப்சல் வீடியோஸ் சி,டி கடையை நடத்திவரும் அதன் உரிமையாளரான நாகர்கோவில் செட்டிக்குளம் சகோதரர் தெருவை சேர்ந்த ராஜேந்திரன் மகன் டென்னிஸ் காந்த் என்பவர் எந்த வித அரசு அனுமதியும் இன்றி புதுப்பட சிடி மற்றும் ஆபாச சிடிகள் விற்பதாக காவல் ஆய்வாளர் அவர்களுக்கு கிடைத்த தகவலின் படி மேற்படி கடையை சோதனை செய்ய கால அவகாசம் இல்லாதால் சோதனை உரிமைக்கடிதம் தயார் செய்து சிறப்பு உதவி ஆய்வாளர் திரு சுந்தர் ராஜ் அவர்களிடம் கொடுத்து அனுப்பிவிட்டு, மேற்படி கடையை

சோதனை செய்ய சாட்சிகளாக பொதுமக்கள் யாரும் முன்வராததால் காவல் ஆய்வாளர் அவர்கள் போலீஸ் பார்ட்டியாகிய எங்களை சாட்சியாக வைத்துகொண்டு மேற்படி கடையை சோதனை செய்தபோது 123 புதுப்பட சிடிக்களும், 11 ஆபாச சிடிக்களும் என மொத்தம் 134 சிடிக்கள் இருந்தது.

3. எனவே காவல் ஆய்வாளர் அவர்கள் கடையின் உரிமையாளரான டென்னிஸ் காந்த் என்பவரை கைது செய்து அத்தாட்சி தயார் செய்து, அந்த அத்தாட்சி போலீஸ் சாட்சிகளாகிய சிறப்பு உதவி ஆய்வாளர் சந்திரபாபு த.கா. பெலிக்ஸ் ஆகியோர்களிடம் கையொப்பம் பெற்று எதிரி மற்றும் வழக்கு சொத்துகக்ளுடன் குளச்சல் காவல் நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்ய ஆய்வாளர் அவர்களுக்கு உதவியாக இருந்தேன். ஆய்வாளர் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை</u>

சம்பவ இடம் ஆள் நடமாட்டம் மிகுந்த பகுதி என்றால் சரிதான். சம்பவ இடத்தில் கைப்பற்றப்பட்ட சிடிக்களை ஆய்வாளரோ, அல்லது நாங்களோ போட்டு பார்க்கவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து சிடிக்களை போட்டு பார்த்தோமா என்றால் நான் பார்க்கவில்லை. ஆய்வாளர் பார்த்தாரா என்றால் எனக்கு தெரியாது. சிடிக்களை வைப்பதற்கு யாரிடம் அனுமதி பெறவேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியாது.

2. கைப்பற்றபட்ட சிடிக்கள் எந்த எந்த திரைப்படங்களில் எத்தனை சிடிக்கள் என்று எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. நான் சம்பவ இடத்திற்கு செல்லாததால் தான் கைப்பற்றப்பட்ட சிடிக்கள் எந்த எந்த திரைப்படங்களில் எத்தனை சிடிக்கள் என்று எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.